

தேவனுடைய வாக்குத்தத்தங்களின்

தேசத்தில் நடை போடுதல்

– PART ONE

"Joshua, Our Pattern"

பல ஆண்டுகளுக்கு முன், கிறிஸ்து இயேசுவில் விசுவாசிகளான நமக்கு இருக்கும் மகத்தான வாக்குத்தத்தங்களை குறித்து ஒரு குட்டத்திதல் நான் பேசி கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட செய்தியில், கல்வாரி சிலுவையில் இயேசு செய்த யாவற்றையும் குறித்தும், அதின் விளைவாக அவர்கள் பெறக்கூடியவைகள் குறித்தும் நான் பேச வேண்டியதாக இருந்தது.

நமக்கு அருளப்பட்டிருக்கும் வாக்குத்தத்தங்களை சித்தரிக்க, நான் கூட்டத்தில் இருந்தவர்களை பார்த்து சொன்னேன், ‘‘நீங்கள் எல்லாரும் பசியாய் இருந்து, நான் ஒரு ஆரஞ்சு பழத்தோட்டத்தின் உரிமையாளராக இருந்தால், இந்த சூழ்நிலையை நான் இரண்டு விதத்தில் அணுகக் கூடும். நான் என் ஆரஞ்சு தோட்டத்திற்கு போய், ஒரு பழத்தை கொண்டு வந்து, ‘இந்தா, இதை சாப்பிடு' என்று சொல்லலாம். அது உங்கள் பசியை தற்காலிகமாக நீக்கும். அல்லது இன்னொரு அணுகுமுறை என்ன என்று சொன்னால், உங்களை ஆரஞ்சு பழத்தோட்டத்திற்கு அழைத்து, அதில் பழங்கள் நிறைந்த மரங்களை உங்களுக்கு காண்பித்து, இப்போது நீங்கள் சுற்றி திருந்து வேண்டியமட்டும் சாப்பிடுங்கள் என்று கூறலாம்''.

என்னை கேட்டுக்கொண்டிருந்தவர்களை பார்த்து சொன்னேன், ‘‘இரண்டாவது அணுகுமுறையை தான் நான் இன்று கையாள போகிறேன். உங்களுக்கு ஒரு ஆரஞ்சு பழத்தை கொடுக்க போவதில்லை - உங்களை ஆரஞ்சு பழத்தோட்டத்திற்கு அழைத்துச்செல்ல போகிறேன்''.

அதே போல், ‘‘தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடைபோடுதல்'' என்ற இந்த ஆராய்வுகளின் மூலம் உங்களையும் அந்த இரண்டாவது அணுகுமுறையின் படி அழைத்துச்செல்ல போகிறேன். உங்களையை ஆரஞ்சு பழத்தோட்டத்திற்கு அழைத்துச் செல்ல போகிறேன் - நீங்கள் உங்களுக்கு வேண்டியவைகளை எல்லாம் எடுத்துக்கொள்ளலாம்.

இந்த ஆராய்வின் ஒவ்வொரு பகுதியிலும், நம்முடைய வாழ்க்கையில் எழும் ஏதோ ஒரு தேவை அல்லது பிரச்சனையை குறித்து நான் பேசுவேன். உங்களை ‘‘ஆரஞ்சு பழத்தோட்டத்திற்கு அழைத்து சென்று,'' - அந்த சூழ்நிலைக்கு ஏற்ப, தேவனுடைய வார்த்தையிலிருக்கும் குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களை கண்டுபிடித்து, அவைகளை நீங்கள் அறிக்கையினால் சொந்தப்படுத்திக்கொள்ள வைப்பேன்.

வாக்குத்தத்தங்களில் தேவைகளுக்கான முன்னேற்பாடு

‘‘தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடைபோடுதல்'' என்ற இந்த ஆராய்வில், முதலில் குறிப்பு மிக முக்கியமானது: தேவனுடைய வாக்குத்தத்தங்களிலேயே நம்முடைய தேவைகளுக்கான முன்னேற்பாடுகள் உள்ளன. இதை உறுதிச்செய்யும் வசனம் 2 பேதுரு 1:3-4ஙல உள்ளது:

THE TEACHING LEGACY OF DEREK PRINCE
DEREK PRINCE MINISTRIES - INDIA
www.derekprince.in - ISSUE #010

தம்முடைய (தேவனுடைய) மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்குக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. **NIV**

இந்த வசனங்களிலுள்ள இரண்டு சத்தியங்களுக்கு நாம் கவனம் செலுத்த வேண்டும். அவை இரண்டும் இலக்கணம் படி, நிறைவுப்பெற்ற காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. அப்படியானால் அவைகள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டன என்று அர்த்தமாகும். தேவனுடைய திவ்ய வல்லமை, ஜீவனுக்கும் தெய்வபக்திக்கும் தேவையான யாவையும் நமக்கு தரப்போகிறார் என்று இவ்வசனம் கூறுவதில்லை. மாறாக, அதை ஏற்கனவே தந்துவிட்டார் என்று கூறுகிறது.

4ம் வசனம் இதே குறிப்பை, இரண்டாவது சத்தியத்தை கொண்டு இன்னும் உறுதி செய்கிறது: *"மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் ..... நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது."* மிக தெளிவாக, நமக்கு தேவைப்படக்கூடிய யாவையும் தேவன் நமக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டார். அது நம்மிடம் எப்படி வந்தடைகிறது? தேவன் அதை தமது வாக்குத்தத்தங்களின் மூலம் நமக்களிக்கிறார்.

நம்முடைய சுதந்திரத்தை சுதந்தரித்துக்கொள்ளுதல்

இந்த ஆரம்பப்பகுதி போதனையில் நம்முடைய இரண்டாவது குறிப்பிற்கு நாம் இப்போது வருகிறோம்: தேவனுடைய வாக்குத்தத்தங்களே நம்முடைய சுதந்திரமாயிருக்கிறது. இந்த சத்தியத்தை நாம் ஆராய்ந்து பார்த்தால், புதிய ஏற்பாடு எப்படி பழைய ஏற்பாட்டையே பிரதிபலிக்கிறதென்று காண முடிகிறது. பழைய ஏற்பாட்டில், யோசுவா என்ற தலைவரின் கீழ், தேவன் தம்முடைய மக்களை வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்குள் நடத்திச்சென்றார். புதிய ஏற்பாட்டில், இயேசு (யோசுவா என்ற அதே பெயரின் எபிரெய வடிவம்) என்ற தலைவரின் கீழ், தேவன் தம்முடைய மக்களை வாக்குத்தத்தங்களின் தேசத்திற்குள் அழைத்து செல்கிறார். ஆகையால், தேவனுரமய வாக்குத்தத்தங்களே நம்முடைய சுதந்திரமாயிருக்கின்றன. "தேவனுடைய வாக்குத்தத்தங்களின் தேசத்தில் நடைபோடுதல்" என்ற இந்த ஆராய்வில், நம்முடைய சுதந்திரத்தை குறித்த ஒரு தெளிவான பார்வையை பெற்று, அதை சுதந்தரித்துக்கொள்வது எப்படி என்று புரிந்து கொள்வதே நம்முடைய இறுதி நோக்கமாக இருக்கிறது.

வெறும் ஒரு அறிவுசார்ந்த கலந்துரையாடலை கடந்து, இந்த போதனை தொடர் மிகவும் செயல்முறையான ஒன்றாக இருக்கும்.

யோசுவாவின் வாக்குத்தத்தம்

இப்போதனை தொடரில் வர இருக்கும் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக, நான் ஒரு அஸ்திபார கோட்பாடை நிலைப்படுத்த விரும்புகிறேன். இதை செய்வதற்கு, நாம் ஒரு வாக்குத்தத்தத்தை ஆராய போகிறோம். இது ஒரு விதத்தில் எல்லா வாக்குத்தத்தங்கள் சுதந்தரிக்க திறவுகோலாக இருக்கிறது. தம்முடைய ஜனங்களை அவர்களுடைய சுதந்திரத்திற்குள் நடத்திச்செல்ல, தேவன் யோசுவாவை ஏற்படுத்தினபோது, அவனிடம் தேவன் சொன்ன ஒரு வாக்கியம் இது. இந்த அற்புதமான வாக்குத்தத்தம், யோசுவா 1:8ல் இருக்கிறது:

"இந்த நியாயப்பிரமாணம் புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துக்கொள்ளுவாய்" **NAS**

என்ன ஒரு வாக்கியம்! யோசுவாவுக்கு கொடுக்கப்பட்ட புரண வேற்றியின் முழு உறுதியளிக்கும் இந்த வாக்குத்தத்தை விட வேறொன்று இல்லையென்றே நம்புகிறேன். "அப்போது உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், உனக்கு வேற்றி உண்டாகும்", இந்த அற்புதமான ஊக்குவிப்பு, இரண்டு விளைவுகளை உட்படுத்துகிறது: செழிப்பு மற்றும் வெற்றி.

மனிதர்களோடு பல ஆண்டுகள் இடைப்பட்டதில் நான் கண்டடைந்தது என்னவென்றால், ஒருவருக்குமே தோல்வியடைய விரும்பவில்லை. அடியாளத்தில், வெற்றி பெற வேண்டும் என்ற ஒரு தீவிற வாஞ்சையுடனே ஒவ்வொரு மனிதனும் பிறக்கின்றான். ஆகவே, மக்கள் தோல்வியடையும் போது, அவர்கள் விரும்புகிறதால் தோல்சிடைவதில்லை. அவர்கள்வெற்றி பெற அறியாமல் இருப்பதினால், தோல்வியடைகிறார்கள். அதிர்ஷ்டவசமாக, நாம் இப்போது ஆராய்ந்த வசனம், வெற்றி பெறுவது எப்படி என்பதையே நமக்கு போதிக்கிறது. யோசுவிற்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமே, வெற்றிபெறுவதற்கான தேவனுடைய உறுதியான வழி.

நிபந்தனைகளை நிறைவேற்றுதல்

தேவன் வைத்திருக்கும் நிபந்தனைகளை இக்கட்டத்தில் ஆராய்வது முக்கியமாகும். நாம் ஆராய்ந்துக் கொண்டிருந்த வசனத்தில் உள்ள சில முக்கிய வாக்கியங்களில் இது

வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. முதலாவது, "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக." (இப்பகுதியில் "வாய்" என்ற சொல்லுக்கு விசேஷ கவனம் செலுத்துங்கள்). இரண்டாவதாக, "இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக" தியானம் என்பது இருதயம் மற்றும் தொடர்புடையது - அதாவது நம்முடைய உள்ளான மனுஷன். இதன் தாத்பரியம் என்னவென்றால், அவருடைய வார்த்தை நம்முடைய உள்ளான மனுஷனை ஊடுருவி செல்ல நாம் அனுமதிக்க வேண்டும். மூன்றாவதாக, "இதில் எழுதியிருக்கிறபடியெல்லாம் செய்ய கவனமாயிரு" என்று அவ்வசனம் கூறுகிறது.

இங்கு முக்கியமான வார்த்தைகள், "வாய்", "தியானிப்பாயாக" மற்றும் "செய்ய கவனமாயிரு" என்பவைகள் ஆகும். இவைகளுக்கு பிரதிவிளைவாக, நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நான் வரிசையை மாற்றி கூறப்போகிறேன் - நீங்கள் தேவனுடைய கட்டளையை நடபிக்க வேண்டும். இந்த முழு செயல் தொடரும், சரியான தியானம், சரியான பேச்சு மற்றும் சரியான செயலை உட்படுத்துகிறது. நம்முடைய சிந்தைகள், வார்த்தைகள் மற்றும் செயல்களின் நேர்மை, அவைகள் தேவனுடைய கட்டளைகளின் படி உள்ளனவா இல்லையா என்பதையே பொருத்தது.

தேவன் சொல்வதையே சொல்வது

இந்த உண்மைகளை நம்முடைய வாழ்வில் இன்னும் நிலைபடுத்த, நாம் இப்போது புதிய ஏற்பாட்டை பார்ப்போம், நாம் கவனம் செலுத்த இருக்கும் பகுதி, ரோமர் 10:8-10. புதிய ஏற்பாட்டின் படி இரட்சிப்படைவதற்கு என்ன தேவை என்பது இங்கு கூறப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை குறித்து இங்கு பேசும் போது, பவுல் சொல்கிறார்:

"இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது; இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற —விசுவாசத்தின் வார்த்தையே, என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிக்கப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" **NAS**

இந்த வசனங்கள் தோறும், இருதயமும் வாயும் ஒன்றாக இணைக்கப்படுவதை கவனியுங்கள். (பவுல் இந்த படிகளை எந்த வரிசையில் முன் வைக்கிறார் என்பதை இப்போதனையில் பின்பு காணலாம்).

முதலாவது, இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள இரண்டு முக்கிய கருப்பொருள்களை நான் விளக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. வேதத்தில் "அறிக்கை" என்ற வார்த்தைக்கு ஒரு விசேஷ அர்த்தமுண்டு. அதின் நேர் பொருள், "சொல்வதையே சொல்வது" என்பதாகும். ஆகையால், நாம் அறிக்கை செய்யும்போது, தேவன் தம்முடைய வார்த்தையில் சொல்லியிருப்பதையே, நம் வாயினால் சொல்கிறோம். தேவனுடைய வார்த்தையிலிருந்து எந்த கருப்பொருள் தியானிக்கப்பட்டிக்கொண்டிருந்தாலும் சரி, இது பொருந்தும் - அது பாவம், இரட்சிப்பு, சுகம் அல்லது ஜெபம் போன்ற எந்த கருத்தாயிருந்தாலும் சரி. "அறிக்கையென்பது நம்முடைய வாயின் வார்த்தைகளை, தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போக செய்வதாகும்"

ரோமரின் அப்பகுதியில் "இரட்சிப்பு" என்கிற வார்த்தை, இயேசுவின் கல்வாரி சிலுவையின் மரணத்தினால் வழங்கப்பட்ட எல்லா நற்பலன்களையும் உட்படுத்தும். ஆவிக்குரிய பலன்கள், சரீரப் பிரகாரமான பலன்கள், பொருளாதார பலன்கள், இவ்வாழ்க்கைக்கும் இனி வரும் வாழ்க்கைக்கான பலன்கள் - காலம் மற்றுஹம நித்தியத்திலுள்ள பலன்கள் யாவையும் உட்படுத்தும். இதை மனதில் கொண்டு, வாய்க்கும் இருதயத்திற்கும் உள்ள தொடர்பை குறித்து பவுல் என்ன கூறுகிறாரென்று இப்போது காண்போம்.

வாய் & இருதயம்

இந்த ஜோடி வார்த்தைகளை பவுல் மூன்று முறை பயன்படுத்துகிறார் - ஒவ்வொரு வசனத்திலும் ஒருமுறை. 8-ம் வசனத்தில், "இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது" என்று கூறுகிறார். முதலாவது வருவது வாய், பின்பு இருதயம் என்பதை கவனியுங்கள். 9ம் வசனத்தில், "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினால் அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்று கூறுகிறார். இங்கும், இருதயத்திற்கு

முன்பாக வாய் வருவனை கவனியுங்கள். ஆனால் 10ம் வசனத்தில் இந்த ஜோடி வார்த்தைகளை அவர் மூன்றாம் முறையாக பயன்படுத்தும் போது, அதின் வரிசையை அவர் மாற்றுகிறார்: “நீதியுண்டாக இருதயத்தில் விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். இங்கே இருதயம் வாய்க்கு முன் வருகிறது.

இந்த வரிசை மாற்றத்திற்கு ஒரு மிகவும் செயல்முறையான காரணம் உண்டென்று விசுவாசிக்கிறேன். பல நேரங்களில், உங்கள் சொந்த அனுபவத்தில் தேவனுடைய சத்தியத்தை குறித்து நம்பிக்கை ஏற்பட, சரியான அறிக்கை செய்வதே வழியாக அமைகிறது. உங்கள் இருதயத்தில் தேவனுடைய வார்த்தையின் ஏதோ ஒரு சத்தியத்தை என்னால் நம்ப முடியவில்லை என்ற உணர்வு இருந்தாலும், அது தேவனுடைய வார்த்தையென்றும், தேவனுடைய வார்த்தை துவக்கம் முதல் முடிவு வரை உண்மையென்றும் நீங்கள் உங்கள் வாயினால் உறுதி செய்கிறீர்கள். தேவன் அதை சொல்லுகிற ஒரே காரணத்தினால், நீங்களும் அதை அறிக்கைச்செய்ய ஆயத்தமாய் இருக்கிறீர்கள். ஒரு விதத்தில், நீங்கள் உங்களையே தாழ்த்துகிறீர்கள். தேவனுடைய வார்த்தையின் அதிகாரத்திற்கு முன் உங்கள் மாம்சீக மனதை தாழ்மைப்படுத்துகிறீர்கள். தேவன் அதை சொல்லுகிறதினால், நீங்களும் உங்கள் வாயால் அதை சொல்லுகிறீர்கள்.

நம்முடைய இருதயத்திற்குள்

ஆச்சரியப்படும் விதமாக, உங்கள் வாயிலிருந்து, இது உங்கள் இருதயத்திற்குள் செல்லுகிறது. இரண்டு தரம் வாயினால் சொல்லுகிறீர்கள், அதற்குள் அது உங்கள் இருதயத்தில் நிலைநாட்டப்படுகிறது. அதற்கு பின் அதை நீங்கள் இயற்கையாகவே சொல்லுகிறீர்கள் - ஏனென்றால் அது உங்கள் இருதயத்தில் இருக்கிறது. இருதயத்திலிருந்து அது இயல்பாக உங்கள் வாய்க்கு வந்துவிடுகிறது.

தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தில், பெரும்பாலும் இவ்விதமாகவே நம்மை நாமே அறிக்கை செய்துக்கொள்ளுகிறோம். வார்த்தை நம்முடைய வாயிலிருந்து இருதயத்திற்கு சென்று, பின்பு இருதயத்திலிருந்து மறுபடியும் நம்முடைய வாய்க்கு வருகிறது. இவ்விதமாய் இரட்சிப்புண்டாக அறிக்கை செய்யப்படுகிறது.

ஆனால் அறிக்கை என்பது வெறும் முதல் படி மட்டுமே. அதை பின் தொடர வேண்டியது, செயல். யாக்கோபு 2:17 மற்றும் 26ல் உள்ள பின் வரும் வசனங்கள் இந்த சத்தியத்தை காண்பிக்கின்றன - தேவனுடைய வார்த்தை உங்கள் வாயிலும் இருதயத்திலும் நிலைநாட்டப்பட்ட பின், அதை நீங்கள் செயல்படுத்த வேண்டும்:

> *அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்தத்தாயிருக்கும்.*

அதற்கு பின் மறுபடியும்:

> *அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்தத்தாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.*

வேறு வார்த்தைகளில் சொன்னால், வெறும் விசுவாசித்து சொன்னால் மட்டும் போதாது. அதை நான் செயல்படுத்தியும் காண்பிக்க வேண்டும். ஆகவே, யோசுவாவிற்கு நிலைநிறுத்தப்பட்ட அதே கோட்பாடுக்கு நாம் திரும்புகிறோம்: தேவனுடைய வார்த்தையை சிந்தி, தேவனுடைய வார்த்தையை பேசு, தேவனுடைய வார்த்தையை செயல்படுத்து, இதன் விளைவு உத்திரவாதமாக சொல்லப்பட்டிருக்கிறது: வெற்றி!

நீங்கள் எப்படி ?

இப்போதனையில் பேசப்பட்ட வெற்றியை உங்கள் வாழ்விலும் காண ஆசைப்படுகிறீர்களா? உங்கள் வாழ்விலும் இது உண்மையாக மாறுவதை காண ஏங்குகிறீர்களா? தேவனோடிருக்கும் உறவில், இப்பகுதியில் முன்னேற உங்களுக்கு விருப்பமுண்டேன்று நீங்கள் தேவனுக்கு தெரிவிக்க விரும்பினால், அந்த விருப்பத்தை பின் வரும் ஜெபத்தின் மூலம் தேவனுக்கு தெரியப்படுத்தலாம்:

> *ஆண்டவரே, எனக்கும் என் குடும்பத்திற்கும் அநேக வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறீர் என்பதை விசுவாசிக்கிறேன். இவைகள் உம்முடைய வார்த்தையில் தெளிவாக கூறப்பட்டுள்ளன என்று அறிவேன். எனக்காக நீர் வைத்திருக்கும் சுதந்திரத்தை குறித்து ஒரு தெளிவான பார்வை எனக்கு உண்டாக உதவி செய்யும். அதன் பின் விசுவாசத்தினால் அதற்குள் பிரவேசிக்க என்னை வலுவூட்டும்.*
>
> *ஆண்டவரே இன்று இந்த ஜெபத்தின் மூலம், நீர் எனக்காக வைத்திருக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தமும் நிறைவேற வாஞ்சிக்கிறேன் என்பதை உமக்கு தெரிவிக்கிறேன். உம்முடைய சத்தியத்தை சிந்திக்கவும் பேசவும் விரும்புகிறேன். அந்த அறிக்கையை என் வாழ்வில் செயல்படுத்தவும் விரும்புகிறேன்.*
>
> *உமக்குள் வெற்றி என்ற இறுதி விளைவிற்குள் கொண்டுவர, உம்முடைய வல்லமையில் நான் விசுவாசம் வைக்கிறேன், என் சுதந்திரமாக இருக்கும் உம்முடைய வாக்குத்தத்தங்களுக்காக நன்றி.*
>
> *ஆமென்.*

YOUR DETAILS

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

A contribution to help cover our costs is always appreciated :

My gift enclosed: ₹

Derek Prince
Ministries - India

Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017